DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 213/2017** | |
| Prosecution Witness | | | : | **PW - 13** | |
| Name | : | திருமதி காயத்திரி | Occupation | : | உதவி இயக்குநர், வட்டார தடய அறிவியல் ஆய்வகம், தஞ்சாவூர் |
| Father's Name/ Husband | : | பிரபாகர் | | | |
| Village | : | | Age | : | 54 |
| Taluk | : | தஞ்சாவூர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 23rd day of February 2026. 23-02-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 11.40**

(முதல் எதிரி காவலில் ஆஜர் படுத்தப்பட்டார்) எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**காணொளி மூலம் ஆஜர் படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25/01/2017 அன்று நான் மேற்கண்ட ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணியில் இருந்த போது, இறந்த அருள்குமார் வயது 14 என்பவருடைய உடல் உள்ளுறுப்புகளான 1)சிறுகுடல், 2) இரைப்பை, 3)கல்லீரல், 4) சிறுநீரகம், 5) பதப்படுத்தும் உப்புநீர் ஆகியவை சரியாக மூடி முத்திரையிடப்பட்டு , பிரேத பரிசோதனை எண் 01/2017 நாள் 18/01/2017 என குறிக்கப்பட்டு, பாபநாசம் அரசு மருத்துவமனை மருத்துவ அதிகாரியிடமிருந்து சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ராஜு என்பவர் மூலமாக ரசாயன பகுப்பாய்விற்காக

ஆய்வகத்தில் ஒப்படைக்கப்பட்டது. பெறப்பட்ட மேற்கண்ட 5 மாதிரிகளை பகுப்பாய்வு மேற்கொண்டதில் அவை எவற்றிலும் எவ்வித நச்சுபொருளும் காணப்படவில்லை . நான் வழங்கிய நஞ்சியியல் அறிக்கை அ.சா.ஆ. 13 ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

**முடிக்கப்பட்ட நேரம்: 11.46**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

<table>
<tr><td colspan="3">Case No</td><td>:</td><td colspan="3">S.C : 213/2017</td></tr>
<tr><td colspan="3">Prosecution Witness</td><td>:</td><td colspan="3">PW - 12</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td colspan="2">திரு.பாபு</td><td rowspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">தலைமை காவலர், அய்யம்பேட்டை</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td colspan="2">பஞ்சமூர்த்தி</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td colspan="2"></td><td rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">38</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td colspan="2">கபிஸ்தலம், பாபநாசம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 23rd day of February 2026. 23-02-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 11.34**

(முதல் எதிரி காவலில் ஆஜர் படுத்தப்பட்டார்) எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் தற்போது அய்யம்பேட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கபிஸ்தலம் காவல் நலையத்தில் காவலராக பணியில் இருந்த போது 18/01/2017 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு நிலையத்தில் இருந்த போது ஆய்வாளர் நிலைய குற்ற எண் 30/2017, ச/பி 302 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கையை விரைவு தபாலாக பெற்று , பாபநாசம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்றும் காவல் அதிகாரிகளுக்கும் கொடுத்து ஆய்வாளரிடம் நிலையம் வந்து அறிக்கை செய்தேன் . எனக்கு வழங்கப்பட்ட பாஸ்போர்ட் **அ.சா.ஆ.12** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசார**ணை

காவல் நிலையத்தில் இருந்து நீதிமன்றம் 7 கி.மீ. மோட்டார் சைக்களில் வந்தால் 30 நிமிடங்கள் ஆகும். நான் அன்று மோட்டார் சைக்களில் தான் போனேன் . அச்சு முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு 18/01/2017 காலை 10.30 மணிக்கு தான் கிடைக்கப்

பெற்றுள்ளது என்றால் ஆமாம் . பாஸ்போர்ட்டில் என்னிடம் எத்தனை மணிக்கு முதல் தகவல் அறிக்கை கொடுக்கப்பட்டது என்ற விவரம் என்றால் சரி. நான் சொன்ன நேரத்தில் முதல் தகவல் அறிக்கையை ஆய்வாளரிடம் பெறவில்லை என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 11.38**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 213/2017** | |
| Prosecution Witness | | | : | **PW - 11** | |
| Name | : | திரு.என்.ராஜு | Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் ( ஓய்வு) |
| Father's Name/ Husband | : | நடராஜன் | | | |
| Village | : | | Age | : | 65 |
| Taluk | : | பாபநாசம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 23rd day of February 2026. 23-02-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 11.26**

(முதல் எதிரி காவலில் ஆஜர் படுத்தப்பட்டார்) எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் கபிஸ்தலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளரா பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று, பாபநாசம் பூண்டியில் வசிக்கிறேன். நான் கபிஸ்தலம் காவல் நிலையத்தில் 18/01/2017 ஆம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது, கபிஸ்தலம் காவல் நிலைய குற்ற எண் 30/2017 ச/பி 302 இதச வழக்கில் இறந்து போன சிறுவன் அருள்குமாரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய ஆய்வாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று , பாபநாசம் அரசு மருத்துவமனை மருத்துவரிடம் ஒப்படைத்து பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை முடிந்தபின்னர், பிரேதத்தை பெற்றோர் வசம் ஒப்படைத்தேன். பிரேதத்தின் போது , அதன் உடலில் இருந்த

ஆடைகளை பெற்று நிலையம் வந்து ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன் . அதற்கான அறிக்கை **அ.சா.ஆ. 11 ஆகும்.** பிரேதத்தில் சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை மருத்துவமனையில் பெற்று ரசாயன பகுப்பாய்விற்காக தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசார**ணை இல்லை.

**முடிக்கப்பட்ட நேரம்: 11.31**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | **S.C : 213/2017** | | | |
| Prosecution Witness | : | **PW - 10** | | | |
| Name | : | Dr.திரு.ராஜ்மோகன் | Occupation | : | மருத்துவர் |
| Father's Name/ Husband | : | தங்கவேல் | | | |
| Village | : | | Age | : | 47 |
| Taluk | : | தஞ்சாவூர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 23rd day of February 2026. 23-02-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 11.00**

(முதல் எதிரி காவலில் ஆஜர் படுத்தப்பட்டார்) எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி 2 ஆஜரில்லை. 2 ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு 355 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் , குழந்தைகள் நலபிரிவில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன் . இதற்கு முன்பு 18/01/2017 அன்று பாபநாசம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்த போது , அன்று பகல் 01.40 மணிக்கு கபிஸ்தலம் காவல் நிலைய குற்ற எண் 30/2017, வழக்கில் கொலையுண்டு இறந்து போன அருண்குமார் ஆண் வயது 14, என்பவரின் சடலத்தை இறப்பின் உண்மை காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனை செய்ய வேண்டி காவல் ஆய்வாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் பேரில் , பிரேத பரிசோதனையை அன்றைய தினம் பகல் 01.50 மணிக்கு பிரேத பரிசோதனை ஆரம்பித்தேன்.

பிரேத பரிசோதனை விவரம். 14 வயது மதிக்கத்தக்க ஆண் சிறுவனின் உடல் பாபநாசம் அரசு மருத்துவமனை சவகிடங்கில் கிடத்தப்பட்டிருந்தது . அவரின் உடலில் முழுவதும் விரைப்பு தன்மை காணப்பட்டது . கண்கள்

பாதி திறந்த நிலையில் இருந்தது . மூக்கின் இருபுறமும் ரத்தம் வடிந்த நிலையில் காணப்பட்டது. காதின் இருபுறமும் ரத்தம் காணப்பட்டது. வாய் திறந்த நிலையில் இருந்தது. பற்கள் முழுமையாக இருந்தன. மேலும் நாக்கு வாயின் உள்புறம் இருந்தது . அவருக்கு ஏற்பட்ட வெளிக்காயங்கள், 1) இடது கழுத்தில் 4x2x2cm அளவில் ஆழமான சிதைந்த காயம் காணப்பட்டது.

2) இடது காரை எலும்பில் மேல்புறம் 7x4x2cm அளவில் ஆழமான சிதைந்த காயம் காணப்பட்டது.

3) இடது காரை எலும்பில் கீழ்புறம் 3x2x4cm அளவிலான குத்துக்காயம் காணப்பட்டது.

4) தொப்புளின் மேல்புறம் 5x3cm அளவிலான வெட்டுக்காயம் காணப்பட்டது. அதன் வழியே 25 செமீ அளவிலான சிறுகுடல் வெளியே வந்திருந்தது.

5) வலது இடுப்பு பகுதியில் 7x4x3cm அளவிலான வெட்டுக்காயம் காணப்பட்டது. அது வலது ஆண் உறுப்பு வரை நீண்டிருந்தது.

6) இடது தொடையில் 2x1 செமீ அளவிலான குத்துக்காயம் காணப்பட்டது.

7) இடது விலா பகுதியில் 3x2x5cm அளவிலான குத்துக்காயம் காணப்பட்டது.

தலையை பரிசோதனை செய்ததில் , 10x3cm அளவிலான ரத்தக்கட்டு வலது பக்க தலையில் காணப்பட்டது . தலை எலும்புகள் உடையாமல் இருந்தது. மேலும் தலையின் உள்புறம் பரிசோதித்த போது , தலையின் முன்புறம்முள்ள மூளை, பக்கவாட்டு மூளை, பின்புறமூளை ஆகியவற்றில் ரத்தம் கசிந்து உறைந்த நிலையில் காணப்பட்டது . மூளை உயிர் மூச்சு(Brain Stem) பகுதி ரத்தம் உறைந்த நிலையில் காணப்பட்டது. உடல் உள்ளுறுப்புகளை பரிசோதனைக்காக சேகரித்து அனுப்பப்பட்டது .

பரிசோதனை முடிவு கிடைத்த பின் , இறப்பிற்கான காரணம் தலையில் ஏற்பட்ட உள்காயம் மற்றும் அதிகப்படியான ரத்த இழப்பு மற்றும் வயிற்றில் ஏற்பட்ட ஆழமான காயம், அதனால் ஏற்பட்ட ரத்த இழப்பு ஆகியவை ஆகும். மேற்சொன்ன சிறுவனுக்கு ஏற்பட்ட காயங்கள் இரும்பு கம்பியால் தலையில் தாக்கப்படும் போதும், சூலாயுதம் போன்ற ஆயுதத்தால் வயிற்றில் குத்தப்படும் போதும் ஏற்பட வாய்ப்புள்து என்றால் சரி . நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ. 9 ஆகும்.** இறுதி அறிக்கை **அ.சா.ஆ. 10 ஆகும்.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசார**ணை.

இறந்து போன நபருக்கு தலையில் எதுவும் வெளிக்காயம் இல்லை என்றால் சரியல்ல. தலையை திறந்த பார்த்த போது காணப்பட்ட காயங்கள் இரும்பு போன்ற கடினமான ஆயுதங்களால் தாக்கப்படும் போது ஏற்பட வாய்ப்புள்ளது.

**முடிக்கப்பட்ட நேரம்: 11.21**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.